PR.NO: 9.
செ.வெ.எண்: 09

நாள்: 05.04.2017

# பத்திரிக்கைச்செய்தி

## திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடத்திற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டத்தில் விளாகம் கிராமத்தில் கிராம உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது. அக்காலியிடத்திற்கு இன சுழற்சி முறையில் தகுதியுள்ள பதிவுதாரர்களின் பட்டியல் திருநெல்வேலி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கோரப்பட்டுள்ளது.

இதற்கான கல்வித் தகுதியாக 5ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்சம் வயது 21 இருக்க வேண்டும். அதிகபட்ச வயது 30 வயதும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /பிற்பட்ட வகுப்பினர் /ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 35 வயதும் இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| இனசுழற்சி எண்: 18 அடிப்படையில் | விளாகம் கிராமத்திற்கு - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்( Other than Muslims) - Woman – Non-Priority |

மேற்படி காலியிடத்திற்கு அந்த கிராமத்தைச் சார்ந்த நபர்களும், அக்கிராமத்திற்குட்பட்ட குக்கிராமங்களைச் சார்ந்த நபர்களும் தகுதியுள்ளவர் ஆவர்கள். மேற்கண்ட தகுதியுள்ளவர்கள் தனித்தாளில் தனது சுய விவரங்களுடன் நாளது தேதி வரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக முன்னுரிமை மற்றும் இனச்சுழற்சி அடிப்படையில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் வருவாய் வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பாளையங்கோட்டை என்ற முகவரிக்கு 17.04.2017 அன்று மாலை 5.45 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின்பு

வரப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தேர்வு முறைகள் அனைத்தும் ஒளிவு மறைவற்ற வகையில் தான் மேற்கொள்ளப்படும் என்பதால் எந்தவிதமான இடைத்தரகர்களிடம் யாரும் ஏமாறவேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பணியிடத்திற்கான தகுதியான நபர்களை வருவாய்துறை சட்டத்தின்படி நியமனக் குழுவினரால் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்படுவதற்கு முன்னர் சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படுவதற்கு எவ்வித பயணப்படி தொகையும் வழங்கப்படமாட்டாது. நியமனத்தில் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் ரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் பாளையங்கோட்டை வட்டாட்சியருக்கே உண்டு. நியமனம் அனைத்தும் வருவாய் துறை அரசாணையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் மற்றும் இடம் ஆகியவை குறித்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே தபால் மூலம் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அளிக்கும் சான்றுகள் கண்டிப்பாக உரிய அலுவலர்களிடம் மட்டுமே பெறப்பட்டு இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் வழங்கும் சான்றுகளில் போலியானது எனத் தெரியவந்தால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருநெல்வேலி.

வட்டாட்சியர்
பாளையங்கோட்டை

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.